**தமிழ் நாடு அரசு**

கடித எண்: 39957/தவ1/82-1
நாள் 13.8.1982

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9

**கல்வி அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை**

அனுப்புநர்

திரு செ. ராமதாஸ், இ.ஆ.ப.,
ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்,
கல்வி அறிவியல் மற்றும்தொழில்நுட்பவியல் துறை
சென்னை-9

பெறுநர்

அனைத்துத் துறைத் தலைவர்கள்
அனைத்துத் தலைமைச் செயலகத்துறைகள்

அய்யா,

பொருள்: ஆட்சிமொழி - தமிழ் - ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டம். அரசு அலுவலகங்களில் நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை நிலை எண்:432, நாள் 10.3.81.
2. அரசு கடித எண்:43050/தவ1/81-1, நாள் 2.6.81.
3. தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண்:ந.க. இ2/ 4351/82 நாள் 23.4.82.

...

பார்வை ஒன்றில் கண்ட அரசாணை, மற்றும் இரண்டில் கண்ட அரசு கடிதத்தின்படி, ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டம், 1.4.81 முதல், இணைப்பிலுள்ள 17 துறைகளில் செயற்படுத்தப்பட்டு, துறைத் தலைமை அலுவலகங்களிலும், சார்நிலை அலுவலகங்களிலுமுள்ள ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளை எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரிடம் ஒப்படைத்துவிட்ட நிலையில், அரசிடமிருந்து வருகின்ற சுற்றறிக்கைகள், அரசு ஆணைகள் போன்றவை ஆங்கிலத்தில் இருந்தால், அவரவர்கள் அவற்றைத் தமி சார்நிலை அலுவலர்களுக்கு மொழி பெயர்த்து அனுப்புவது என்பது இயலாதது என்பதுடன், மொழி பெயர்ப்பில் தவறுதல் ஏற்பட்டுவிடுமோ என்னும் அச்சம் உள்ளதென்பதும், ஆய்வின் போது, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ளது. எனவே சார்நிலை அலுவலகங்களுக்கு அனுப்ப வேண்டிய சுற்றறிக்கைகள், அரசாணைகள், கடிதங்கள் போன்றவற்றை தமிழிலேயே அனுப்புமாறும் ஆங்கிலத்தில் அனுப்புவது தவிர்க்க இயலாததாயின், தேவையான அளவில், கூடுதல் படிகளை இணைத்து அனுப்புமாறு தமிழ் திட்டம் முழுமையாகச் செயல்படும் அரசு துறைத் தலைவர்களைத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் வேண்டியுள்ளார்.

2. ஆட்சிமொழி திட்ட நிறைவேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்திருந்த, ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகள் துறைத் தலைமை சார்நிலை அலுவலகங்களிலிருந்து திரும்பப் பெறப்பட்ட நிலையில் அவ்வலுவலகங்களுக்குச் சுற்றறிக்கைகளையும், அரசாணைகளையும், ஆங்கிலத்தில் அனுப்புவது திட்ட நிறைவேற்றத்தை தடுத்திடவும், தாமதப்படுத்தவும், பின்னுக்கிழுக்கவும், வகை செய்து விடுகிறது. ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்ற அரசாணைகளைத் துறைத் தலைமை அலுவலகங்களிலோ, சார்நிலை அலுவலகங்களிலோ தமிழில் மொழி பெயர்த்தால் மொழி பெயர்ப்பில் தவறுகளை உண்டாக்கிவிடவும் கூடும்.

த.பி.பா

இந்நிலையில் முனைப்புத் திட்டம் செயற்படுகின்ற துறைகளுக்குரிய ஆணைகள், கடிதங்கள் போன்ற அனைத்தையும் கூடிய வரையில் தமிழில் மட்டுமே வெளியிட கேட்டுக் கொள்ளப்பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

ஆணையர் மற்றும் அரசு செயலாளருக்காக

இணைப்பு

1. பதிவுத்துறை
2. சீர்திருத்தப் பணித்துறை
3. தீயணைப்புத்துறை
4. சிறைத்துறை
5. கால்நடைப் பராமரிப்புத்துறை
6. பள்ளிக் கல்வித்துறை
7. கல்லூரிக் கல்வித்துறை
8. அரசுத் தேர்வுகள் துறை
9. முறைசாராக் கல்வித்துறை
10. தொழில்நுட்பக் கல்வித்துறை
11. பொது நூலகத்துறை
12. அருங்காட்சியகத்துறை
13. விளையாட்டு–இளைஞர் பணித்துறை
14. தமிழ் நாடு ஆவணக் காப்பகம் வரலாற்று ஆராய்ச்சியகம்
15. சட்டக் கல்வித்துறை
16. தொல் பொருள் ஆய்வுத்துறை
17. புள்ளியியல் துறை

/உண்மை நகல்/